

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜனவரி 10, 2019 | புரட்சி 17 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00


## அரசு நிதி உதவியுடன் பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில்

# அறிவியல் மாநாடு என்ற பெயரில் 'காமெடி கலாட்டா'

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் கடந்த ஜனவரி 3ஆம் தேதி இந்திய அறிவியல் மாநாடு என்ற பெயரில் 'காமெடி கலாட்டா நிகழ்ச்சி' ஒன்றை அரங்கேற்றி யுள்ளனர். பிரதமர் மோடி இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்திருக்கிறார். தமிழகத்தில் ஆழியாறில் செயல்படும் உலக சமுதாய சேவை மய்யத்தில் வேலை செய்யும் கண்ணன் ஜெகதாள கிருஷ்ணன் என்ற 42 வயது பேர் வழி அய்ன்ஸ்டின், நியுட்டன் கோட்பாடுகள் தவறு; புவி ஈர்ப்பு விசை என்பதும் தவறு என்று பேசியிருக்கிறார். தன்னை ஒரு இயற்பியல் விஞ்ஞானி என்று கூறிக் கொண்ட அவர் "20ஆம் நூற்றாறண்டு அய்ன்ஸ்டின் நூற்றாண்டு என்று கூறுகிறார்கள்; அடுத்த சில ஆண்டுகளில் அது என்னுடைய நூற்றாண்டாகப் பெயர் மாறப் போகிறது" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார்.

இவர் இயற்பியல் படித்தவரே அல்ல என்றும் மின்பொருள் துறை படித்த பொறியியல் பட்டதாரி தான் (எலக்டிரிக்கல் என்ஜினியர்) என்றும், 'இந்து' ஆங்கில நாளேடு சுட்டிக்காட்டியிருக்கிறது. ஒரு வேத பண்டிதர் இயற்பியல் விஞ்ஞானியாகும் பெருமைக்கு உரிமை கோருகிறார் என்று இந்து ஆங்கில நாளேடு கிண்டலாக செய்தி வெளியிட்டுள்ளது.

பெயர் சொல்ல விரும்பாத ஒரு இந்திய விஞ்ஞானி கிருஷ்ணனிடம் இது குறித்து உரையாடியபோது, இயல்பியல் குறித்து அவருக்கு எதுவுமே தெரிய வில்லை என்பதைப் புரிந்து கொண்டதாக 'இந்து' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். 'நியூ சவுத் வேல்ஸ்' பல்கலைக்கழக இயற்பியல் விஞ்ஞானி கேதரிங் பிரெய்டிங் 'யாரோ எப்போதோ கூறினார்கள் என்று பேசுவது அறிவியல் அல்ல; (கடவுள் மறுப்பாளரரான) ஸ்டீபன் ஹாக்கிங் - அய்ன்ஸ்டீன் கோட்பாட்டைவிட வேதங்களின் கோட்பாடுகள் உயர்ந்தது என்று பேசியதாகக் கூறுவதற்கு என்ன சான்று இருக்கிறது? எங்கே எப்போது ஸ்டீபன் ஹாக்கிங் அப்படி பேசினார்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். ஸ்டீபன் ஹாக்கிங் கூறிய கருத்துகள் தவறானவை என்பதை சுட்டிக் காட்டி அவருக்கு மின்னஞ்சல் அனுப்பியதாக இந்த ஜலந்தர் மாநாட்டில் கண்ணன் பேசியதையும் அவர் கேள்விக்கு உட்படுத்தியிருக்கிறார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இம்பாலில் நடந்த 105ஆவது விஞ்ஞான மாநாட்டில் பேசிய மத்திய அமைச்சர் ஹர்ஷவர்த்தன் ஒரு கதையை அவிழ்த்து விட்டார். அய்ன்ஸ்டீன் கருத்தியலைவிட வேதம் உயர்ந்தது என்று ஸ்டீபன் ஹாக்கிங் கூறியதாகக் குறிப்பிட்டு - அப்படி எங்கே கூறினார் என்பதை நீங்களே கண்டுபிடியுங்கள்" என்று பேசினார்.

அதை அமைச்சரிடம் நான்தான் கூறினேன் என்றுஇப்போது கண்ணன் ஜெகதாள கிருஷ்ணன் என்ற இந்த 'டுபாக்கூர்' பேர்வழி மாநாட்டில் பேசியுள்ளார்.

அமைச்சரிடம் தாம் பேசியதற்கு ஆதாரமாக சில படங்களையும் காட்டினார். மின்னஞ்சல் வழியாக சில செய்திகளையும் அனுப்பியுள்ளார். ஆனால் அமைச்சரிடம் அய்ன்ஸ்டின் கோட்பாடு, வேதம் குறித்த ஸ்டீபன் ஹாக்கிங் தெரிவித்ததாகக் கூறப்படும் கருத்து பற்றி எந்த உரையாடலையும் அவர் அமைச்சருடன் நடத்தவில்லை என்று அவரது முகநூல் பதிவுகளை ஆராய்ந்து ஆங்கில 'இந்து' நாளேடு அம்பலப்படுத்தியிருக்கிறது.

இந்திய அறிவியல் மாநாடு பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் நிதி உதவியோடு நடத்தப்படுகிறது. மோடி ஆட்சிக்குப் பிறகு இந்த அறிவியல் மாநாடுகள் 'அபத்தங்கள் - உளறல்களாகவே' மாறி அரசுப் பணம் விரயமாக்கப்பட்டு வருகிறது.

இயற்பியலில் ஒரு பட்டம்கூட பெறாத இவர், ஆஸ்திரேலியாவில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றதாகக் கதை விட்டு வருகிறார்.

ஆந்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் ஜி. நாகேசுவர்ராவ் என்ற 'அறிவுக் கொழுந்து'



மேலும் நகைச்சுவை விருந்து படைத்து வயிறு குலுங்க சிரிக்க வைத் திருக்கிறார்.

மகாபாரத காலத் திலேயே டெஸ்ட் டியூப் தொழில் நுட்பம் இருந்தது. கவுரவர்கள் 100 பேரும் அப்படி சோதனைக் குழாய் வழியாகப் பிறந்த வர்கள் தான்.

"சார்லஸ் டார்வின் நிறுவிய பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை, மகா விஷ்ணுவின் தசாவதாரங்கள் முன்னதாகவே நிரூபித்து விட்டன. விஷ்ணு பயன்படுத்திய சுதர்சன சக்கரம், இலக்கைத் துரத்தி அழித்துவிட்டு மீண்டும் அவரிடமே வந்து சேரும். அந்த வகையில் இன்றைய ஏவுகணைகள் நிலை நிறுத்தத் தொழில்நுட்பத்திற்கு சுதர்சன சக்கரம்தான் முன்னோடி. இராவணனிடம் ஒரேயொரு புஷ்பக விமானம் மட்டும் இருக்கவில்லை; வெவ்வேறு அளவு மற்றும் திறன் கொண்ட 24 வகையான போர் விமானங்கள் இராவணன் வசம் இருந்தன; அவற்றை இயக்குவதற்காக இலங்கையில் ஏராளமான விமான நிலையங்கள் இருந்தன. இராமனுடன் விமானத்தின் வழியாகவே யுத்தம் நடத்தினான். கவுரவர்களின் தாயான காந்தாரி, எப்படி 100 குழந்தைகளைப் பெற்றிருக்க முடியும்? என்று எல்லோரும் ஆச்சரியப் படுகிறார்கள். யாரும் நம்புவது இல்லை. மனிதனால் இது சாத்தியமா? என்றுதான் கேட்கிறார்கள்.

ஆனால், இது சாத்தியம்தான் என்பதை, இன்றைய சோதனைக் குழாய் தொழில்நுட்பம் நிரூபித்திருக் கிறது. மகாபாரதத்தில், கருவுற்ற 100 முட்டைகள், 100 மண்பாண்டங்களில் போடப்படுகின்றன என்றால், அந்த மண்பாண்டங்கள் சோதனைக் குழாய்கள் அல்லாமல் வேறு என்ன?

ஸ்டெம்செல் ஆராய்ச்சியும், 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மண்ணில் நடந்திருக்கிறது. இன்று நாம் ஸ்டெம்செல் ஆய்வு குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், அந்தக் காலத்திலேயே ஸ்டெம் செல் மற்றும் டெஸ்ட் டியூப் தொழில் நுட்பத்தில் பிறந்தவர்கள்தான் கவுரவர்கள். 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில் இது நிரூபிக்கப்பட்டு உள்ளது" என்றும் நாகேஸ்வர் ராவ் தனது கதைகளை அவிழ்த்துவிட்டு காதில் பூ சுற்றியிருக்கிறார். ●

## தமிழ் ஊடகங்களில் முதன்முறையாகப் பெறுகிறார்

# 'நியூஸ் 18' குணசேகரனுக்கு ராம்நாத் கோயங்கா விருது





நியூஸ் 18 தமிழ்நாடு' தொலைக் காட்சியின் முதன்மை ஆசிரியர், குணசேகரனுக்கு, 'ராம்நாத் கோயங்கா இதழியல் சிறப்பு விருது' வழங்கப் பட்டது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனர், ராம்நாத் கோயங்கா நினைவுகளை போற்றும் வகையில், 2004 முதல், ஒவ்வொரு ஆண்டும், ஊடகத்துறை சாதனையாளர்களுக்கு, 'ராம்நாத் கோயங்கா இதழியல் சிறப்பு விருது' வழங்கப்படுகிறது. பத்திரிகையாளர்களின் நேர்மையான, மிகச் சிறப்பான பங்களிப்பை போற்றும் வகையில், இந்த விருது வழங்கப்படுகிறது.

பிராந்திய மொழியில், ஒரு நிகழ்வு அல்லது மக்கள் பிரச்னையை, விரிவாக, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், பதிவு செய்யும், அச்சு மற்றும், 'டிவி' ஊடகவியலாளருக்கு, இவ்விருது வழங்கப்படும். அதன்படி, 2017 ஆம் ஆண்டுக்கான விருதுகளில், பிராந்திய மொழிகளில் சிறந்து விளங்கிய, ஊடகவியலாளர் விருதுக்கு, 'நியூஸ்18 தமிழ்நாடு' முதன்மை ஆசிரியர் மு. குணசேகரன் தேர்வு செய்யப்பட்டார். கன்னியாகுமரி மாவட்டத்தில், 2017 இல், 'ஒக்கி' புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மீனவர்கள் சந்தித்த துயரங்களை, தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வந்ததற்காக, விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார். டில்லியில் நடந்த விழாவில், மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், விருது மற்றும் 1 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசை வழங்கினார்.

விருதுக்காக 650 பேரின் ஊடகப் பணிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் முதல் முதலாக தமிழ் நாட்டு ஊடகம் ஒன்றுக்காக மு. குணசேகரன் இந்த விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி, மூத்த பத்திரிகை யாளர், முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி ஆகியோர் அடங்கிய குழு கடும் பரிசீலனைக்குப் பிறகு விருது வழங்கி இருக்கிறது. அரசியல், பொருளாதாரம் போன்ற அழுத்தங்களையும் மீறி சுதந்திரமாக பணியாற்றியதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து மு. குணசேகரன் விடுத்துள்ள செய்தி:

"பாராட்டு, வாழ்த்துகள் வழியே நண்பர்கள் அன்பைப் பொழிந்து கொண்டு இருக்கிறார்கள். ராம்நாத் கோயங்கா விருது பெற்றது பெருமிதம் தந்த தருணம்.

இந்த விருது எனது தனித்திறமை, அறிவுக்கு கிடைத்தது அல்ல. என்னுடன் பணியாற்றும் எண்ணற்ற பல நண்பர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடும் சலிப்பின்றியும் களத்தில் ஆற்றிய கடும் பணிக்கு கிடைத்த அங்கீகாரம். இந்த அங்கீகாரமும் விருதும் அவர்கள் எல்லோருக்குமானது. கூட்டு உழைப்பின் கனியை அவர்கள் சார்பில் நான் பெற்றிருக்கிறேன் அவ்வளவே.

12 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் இவ்விருதை, தமிழ் அச்சு, ஊடகத்துறை சார்பில் முதல்முறையாக நான் பெற்றிருக்கிறேன். எதிர்வரும் காலங்களில் திறமையான எனது இளைய தலைமுறை இன்னும் அதிகம் பெற்று சாதிக்கும்; தமிழ்க்கொடியை டெல்லியில் உயரப் பறக்கவிடும் என்ற நம்பிக்கை எனக்கு மிகவும் அதிகம். தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் காத்திரமான பங்களிப்பை, அற்புதமான களப்பணியை இதழியலில் மேற்கொள்ளும் பலர் வெளிச்சம் பெறாமலே போய்விடுகின்றனர். அந்த நிலை நிச்சயம் மாறும்; மாற வேண்டும்!

எனது கரங்கள் ஏந்தி இருக்கும் இந்த விருதை தங்கள் கரங்களுக்கானது என நினைத்து பெருமிதம் கொள்ளும் நண்பர்களே எனது பெரும்பேறு! ஆம், எல்லா உயர்வும் வெற்றிகளும் சமூகம் தருபவை; நம் சமூகத்திற்கானவை. நன்றி நண்பர்களே!" – என்று நெகிழ்வுடன் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர்களுக்கான விழா பொங்கல் மட்டுமே

## பெரியார்

*17.1.1968 அன்று கரூரில் பொங்கல் விழா சிறப்புக் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.*

இந்த பொங்கல் விழா என்பது அறுப்புப் பண்டிகைன்னும் சொல்லுவார்கள். அதேபோல நாமும் அறுத்துப் பண்டங்களைக் குடும்பத்துடன் உபயோகப்படுத்துகிற நாள். மற்றும் நம்மாலான வசதிகளை விவசாயத்துக்காக நமக்கு உதவியாய் இருந்து தொண்டாற்றின ஆளுகளுக்கு - அவர்களுக்கு நாம ஏதாவது திருப்தி பண்ணுகிறதுக்கு - சாப்பாடு போடுகிறதோ, அவர்களுக்கு துணிமணி எடுத்துக் கொடுக்கிறதோ அல்லது ஏதாவது காசு கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்துகிறதோ - இதெல்லாம், நாம் விவசாயத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

நேற்று (16.1.968இல்) இந்த நேரத்துக்கு, நான் சேலத்திலே பெரிய மிராஸ்தார் இரத்தினசாமி பிள்ளை என்கிறவர், அவர் தோட்டத்திலே இந்த பண்டிகை வைச்சார். என்னைத்தான் தலைமையாய் அவர் விரும்பினார், போயிருந்தேன். பொங்கல் தடபுடலாக ஒரு அய்ம்பது, அறுபது மாடுகளை வைச்சி நம்ம எதிரிலேயே நடத்தினாரு. இம்மாதிரி இருநூறு பேருக்குச் சீலை வேட்டி தந்தார். ஒரு புலவர் அம்மையார் காமாட்சி அம்மையாருன்னு அந்த அம்மாளைக் கொண்டு நம்முடைய தலைமையிலேயே மக்களுக்கு எல்லாம் எடுத்துக் கொடுக்கச் சொன்னார். கொடுத்தாங்க. இரண்டு மணி நேரம் நடந்தது அந்தப் பண்டிகை. அப்புறம் பத்து, பதினைந்து நாளைக்கு முன்னே 1ஆம் தேதி (1.1.1968ஆம் நாள்) திருநெல்வேலி ஜில்லாவிலே வள்ளியூர் என்கிற ஊரிலே ஒரு விவசாயி அவர் பண்டிகை நடத்தினார். என்னைக் கொண்டே எல்லாருக்கும் எடுத்துக் கொடுக்கச் சொன்னார்.

இது மதத்தைப் பொருத்தது அல்ல. மனிதனுடைய இயற்கையான தன்மையைப் பொருத்ததுதான் இந்தப் பண்டிகை. வேறு யாரும் இதற்கு வேறு கருத்தை ஒண்ணும் சொல்ல முடியாது. ஏனென்றால், இதைத் தான் நாம செய்கிறோம். இதிலே ஒண்ணும் மூட நம்பிக்கையான காரியங்கள் பண்றதில்லே. இதற்கு அவனுடைய பாப்பானுடைய ஆதாரத்தின் படி என்ன கருத்துக் கொடுத்திருக்கிறான் என்றால் இதை மூணு நாளாக ஆக்கினான். ஒரு நாளைக்கு பொங்கல், ஒரு நாள் மாட்டுப் பொங்கல், இன்னொரு நாளைக்குக் கரி நாள் என்று. இதுக்கெல்லாம் அவன் என்ன கதை எழுதி வைத்திருக்கிறான் என்றால் - இந்தப் பண்டிகைகளிலே புராணங்களையும் கடவுள்களையும் மற்றும் முட்டாள்தனங் களையும் ரொம்ப கொண்டுவந்து நிறைய புகுத்தி யிருக்கிறான். இந்தப் பண்டிகை ஆரம்பிச்சது இந்திரனுடைய உற்சவம் - இந்திர விழான்னு - அதிலே எழுதியிருக்கிறான். அது இந்த சிலப்பதிகாரத்திலே கூட இருக்கும் - இந்திர விழான்னு. அதாவது மக்கள் எல்லாம் இந்திரனைக் கும்பிடறதுக்காக, அவனைப் பெருமைப்படுத்துகிறதுக்காக இந்த விழாவை ஆரம்பிச்சாங்களாம்.

இந்திரனுக்கு இந்தப் பண்டிகை நடத்துறதைப் பார்த்து கடவுளுக்குப் பொறாமை வந்துட்டுதாம். நம்மை விட்டுட்டு அவனுக்குப் பண்றாங்களேன்னு. எந்தக் கடவுளுக்கு? கிருஷ்ணனுக்கு. கிருஷ்ணங் கிறவனைக் கடவுள்னு அல்லவா சொல்றாங்க. அவன் இருந்தானோ - இல்லியோ? - கிருஷ்ணன் கடவுள்ன்னு. அவனுக்குப் பெருமை வந்திடுச்சாம். என்னடா இந்த ஜனங்கள் நமக்கு பொங்கல் வைக்காமல் இந்திரனுக்குப் போயி வைக்கிறாங் களேன்னு. இந்திரன் தன்னை என்னா நினைச்சிகிட்டு இருக்கிறான்னா? தான் கிருஷ்ணனுக்கும், இராமனுக்கும் கடவுள்ன்னு நினைச்சிகிட்டு இருக்கிறான். மற்றும் சிவனுக்கும், பிரம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் கடவுள்னு நினைச்சிகிட்டு இருக்கிறான். ஏன்னா? இந்திரனுடைய கணக்குப்படி இவர்கள் எல்லாம் தேவர்கள் தானே தவிர கடவுள்கள் அல்ல. யாரு? சிவன்-விஷ்ணு-பிரம்மா மற்றும் பல கடவுள்களாக இன்னைக்கு நாம கும்பிடுகிறோமே இவனுங்க எல்லாம் தேவர்கள். எதிலே தேவர்கள்ன்னு வர்ராங்கன்னா? வேதத்திலே. வேதத்திலே இந்திரன் தான் தலைவன். எல்லா தேவர்களுக்கும் அவன்தான் அரசன். அவனுக்குப் பேரு தேவேந்திரன்னு பேரு. தேவராஜன்னும் சொல்லுவாங்க. அந்தத் தேவேந்திரன்தான் பெரியவங்கிற முறையிலே அவனுக்கு எல்லாம் வைச்சிகிட்டான். இதற்குக் கிருஷ்ணன் அவன்தான் கடவுள்ன்னு நினைச்சிகிட்டு நாம இருக்கிறபோது அவனுக்கு இதுவெல்லாம் பண்றது என்ன நியாயம் என்பதாகப் பொறாமைப்பட்டு மக்களை எல்லாம் கூப்பிட்டு நீங்கள் இந்திரனுக்குப் பொங்கல் வைக்காதீங்க. இந்திர விழா கொண்டாடாதீங்கன்னு சொன்னானாம். ஜனங்கள் இந்திரனைக் கொண்டாடலே.

உடனே இந்திரனுக்குக் கோபம் வந்திட்டுதாம். நமக்கு நடக்கிற பண்டிகையை இவன் சொல்லி நிறுத்திப் போட்டான்னு, இவன் பேச்சை இந்த முட்டாள் ஜனங்கள் ஏத்துகிட்டு பண்டிகை நடத்தாது விட்டுட்டாங்க. ஆனதினாலே அவர்களை நாம சும்மா விடறாதான்னுச் சொல்லி அவன் பெரிய மழையை ஆரம்பிச்சிட்டானாம். மழை பெய்யுது. அந்த மழை வந்த வேகம் நாடெல்லாம் வெள்ளத்திலே அடிச்சிகிட்டு போற அளவிற்கு அவன் மழையை உண்டாக்கிட்டானாம். இதைப் பார்த்த உடனே ஜனங்கள் கிருஷ்ணன்கிட்டே போயி என்னப்பா நீ சொன்னபடி கேட்டோம். அவன் இந்த மாதிரி ஆரம்பிச்சிட்டானே - இப்ப மழை வந்தன்னா எங்கள் கெதி எல்லாம் என்னாகும்? இருண்டு இருக்குது. இடிஇடிக்குது. அதாகுது இதாகுதுன்னு போயி கிருஷ்ணன்கிட்டே அழுதாங்களாம். அவன் சொன்னானாம், “நீங்கள் அதுக்காகப் பயப்படாதீங்க. நான் உங்களை எல்லாம் காப்பாற்றுகிறேன்னு” பெரிய மலையை விரலிலே தூக்கி கொடையாட்டம் பிடிச்சிகிட்டானாம் (சிரிப்பு). வந்து எல்லோரும் அதுக்குள்ளே பூந்துக்கிட்டாங்கன்னு. இந்த மாடுகள் - மக்கள் மற்ற ஜீவப் பிராணிகள் அது சம்பந்தப்பட்ட ஜீவப் பிராணிகள் அவைகள் எல்லாம் வந்து அந்த மலைக்குள்ளே இருந்து, மழையினாலே தங்களுக்குக் கேடு இல்லாமல் தப்பிச்சிகிட்டாங்க. இதை இந்திரன் கேட்டு, ஆத்திரப்பட்டு அவன் அங்கே இருந்து, கிருஷ்ணன்கிட்டே வந்து நீ ஏன் இந்த மாதிரி பண்ணினேன்னு கேட்டானாம் இந்திரன். கிருஷ்ணன் சொன்னானாம் என்னத்துக்கு உனக்கு இதுவெல்லாம். இது மாதிரி செய்யுறதுன்னு என்ன கட்டாயம்? நீ உன்னால் ஆனதைப் பாரு - நான் என்னாலானதைப் பார்க்கிறேன்னு கிருஷ்ணன் சொன்னானாம். அப்புறம் இந்திரன் பார்த்து, ஓ இவன்கிட்டே நம்ம கை செல்லாது அப்படின்னு நினைச்சி மன்னிப்புக் கேட்டானாம். மன்னிப்பு கேட்டதுக்கு அப்புறம் உன் பண்டிகை உனக்கும் நடக்கட்டும்; என் பண்டிகை எனக்கும் நடக்கட்டும்னு இரண்டு பேரும் பண்டிகை நடக்கிறதுக்கு அனுமதிச்சாங்களாம். அது தான் **போகிப் பண்டிகை** என்கிறது.

போகி - என்றாலே இந்திரன்னு ஒரு அர்த்தம் உண்டு. அந்த வார்த்தைக்கு - சமஸ்கிருத அகராதிப்படி ‘போகி’ன்னா ‘இந்திரன்’னு பேரு. இன்னொரு தத்துவார்த்தம் சொல்லுகிறவன், போகின்னா - போக போக்கியங்களை அனுபவிக்கிறது. ஆனதினாலே அதுக்கு போகின்னு பேரு வைச்சிதுன்னு அப்படியும் சொல்றாங்க. ஆகவே, எந்தக் கதையிலே சொன்னாலும் அது ஒரு முட்டாள்தனமாக கருத்தே தவிர வேறு இல்லை.

மற்றும் இந்த - **மாட்டுப் பொங்கலுக்கு** ஒரு கதை. இதெல்லாம் அவுங்க ஆதாரப்படி நான் சொல்றேன். மாட்டுப் பொங்கலுக்கு என்ன சொல்லி இருக்குதுன்னா? வருஷத்துக்கு ஒரு தடவை இந்த சங்கராந்தி **மூதேவி**யாக வருகிறாளாம். அந்த மூதேவியாக வருகிற சங்கராந்தி இந்த மாடு கன்றுகளை எல்லாம் அழிக்க வேணும்னு சொல்லி **புலி** உருவம் எடுத்து மாடுகளை எல்லாம் பிடிக்கப் போவுதாம். அப்போது ஜனங்கள் கூட்டமாய்ச் சேர்ந்து புலியை விரட்டுகிறது. அது பிடிக்க வருகிறது. இவுக எல்லாம் புலியை விரட்டுறாங்க. அதுதான் அந்த மாட்டுச் சங்கராந்தீங்கிறதுக்கு விளக்கம் போட்டு இருக்கிறான்.

**கரி நாள்**-ன்னு என்னமோ வைச்சி அதிலும் மடத்தனமாய் முன்னே என்ன சொன்னோம் - பின்னாலே என்ன சொன்னோம்னு அவன் கவனிச்சி எழுதினவன் அல்ல. பார்ப்பான் ஆயிரம் கதையை எழுதி வைச்சாலும் தண்ணிலேகூட அறிவைக் கொண்டு எழுதியிருக்க மாட்டான். அப்புறம்தான் நமக்குக்கூட தெரிஞ்சிது. இந்த பொங்கல் வைக்கிறபோது “பொங்கலோ - பொங்கல்”, “புலியோ புலி”ன்னு சேவணி தட்டுவாங்க. இல்லாட்டா தட்டத்தைத் தட்டுவாங்க; கரும்புத் தடியிலே - எனக்கு ஞாபகம் இருக்குது. எங்கள் வீட்டிலே எல்லாம் எல்லாப் பொங்கலும் நடக்கும். மாட்டை எல்லாம் குளத்துக்குள்ளே விடுவாங்க. சாணியினாலே குளமாட்டம் கட்டி, அதிலே புல்லு - பூவு எல்லாம் போட்டு அதை மிதிக்கச் சொல்றபோது மாடு பாட்டுக்கு அதை மிதிச்சிகிட்டு வரும். ஒருத்தன் அதுக்கெல்லாம் பூசை பண்ணிகிட்டு வருவான். இதைக் குடியானவங்க சில பண்ணை ஆளுங்க தட்டத்தை எடுத்துக்கிட்டு கரும்பினாலே தட்டுவாங்க. இங்கேயும் இருக்குதோ என்னமோ அந்த வழக்கம். அங்கே அந்த மாதிரி செய்வாங்க எங்க ஊரிலே, அப்போது சொல்றது, “பொங்கலோ - பொங்கல்!”, “புலியோ புலி” - “பொங்கலோ - பொங்கல்!”, “புலியோ புலின்னு” - அப்படி சொன்னதினாலே அந்த புலி பயந்துகிட்டு ஓடி மாட்டை பாதுகாக்கிறதாம். இதுக்குத்தான் **‘மாட்டுப் பொங்கல்’**ன்னு பேரு வந்ததுன்னு எழுதியிருக்கிறான். இந்த மாதிரியான முட்டாள்தனமான கருத்துக்களில்தான் பண்டிகை பூராவையும் அமைச்சிகிட்டானுங்க.

நமக்கு எத்தனை பண்டிகை இருக்குதோ, அத்தனை பண்டிகையும் இந்த மாதிரியான முட்டாள்தனமான கடவுள் கதைகள் தான் மூடநம்பிக்கைதான். உள்ள பண்டிகைகளிலே ரொம்ப கவலையோட பார்த்தால் இந்த பொங்கல் பண்டிகைதான் - **பகுத்தறிவுப்படி** ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும், இயற்கையாய் நடக்கக் கூடியதாகவும் இருக்கிறதாகச் சொல்லப்படுகிற பண்டிகை.

## கொளத்தூர் சரவணபரத்–பிரியதர்சினி இணை அறிமுக விழா – பெண் விடுதலைக் கருத்தரங்கம்



திராவிடர் விடுதலைக் கழகம் கொளத்தூர் பகுதி தோழர் சரவணபரத் மற்றும் பிரியதர்சினி ஆகியோரது இணை அறிமுக விழா 30.12.2018 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியம் அய்யம் புதூர் அன்னை கனகாம்பாள் திருமண மண்டபத்தில் நடை பெற்றது.

முன்னதாக காலை 10 மணியளவில் அய்யம்புதூரைச் சார்ந்த பெரியார் பெரும் தொண்டர் சி. சுப்பிரமணி அய்யம்புதூர் பகுதியில் கழகத்தின் கொடிக் கம்பத்தை நிறுவி , கொடியேற்று விழா ஏற்பாடு செய்திருந்தார். பறை முழக்கத்தோடு திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கழகக் கொடியை ஏற்றினார்.

பின்னர் ஊர்வலமாக தோழர்கள் அனைவரும் சென்றனர். அதற்கடுத்து காலை 11 மணியளவில் பெண் விடுதலைக் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை வகித்தார் . சேலம் மாவட்ட தலைவர் சூரியக்குமார் முன்னிலை வகித்தார். இரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்) மற்றும் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்) ஆகியோர் இணையர்களை வாழ்த்தி வாழ்த்துரை வழங்கினர்.

‘இணையேற்பு உரிமையும் பெண்ணும்’ என்ற தலைப்பில் கௌசல்யா, ‘பெண்களை இழிவுபடுத்தும் சாஸ்திர சம்பிரதாயங்கள்’ என்ற தலைப்பில் விடுதலை.இராசேந்திரன், ‘இராமனா? இராவணனா’ என்ற தலைப்பில் கொளத்தூர் மணி உரையாற்றினர்.

இணை அறிமுக விழாவையொட்டி சரவண பரத் குடும்ப நிதியாக ரூபாய்.5000–த்தை சரவணபரத் தாயார் செல்வி வழங்கினார்.

# பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (3)

# ‘தேசியக் கொடி’ எரிப்பு அறிவிப்பும் அதன் தாக்கமும்

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ‘பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்’ என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையி லிருந்து.*

இந்தித் திணிப்புக்கு எதிராக இந்திய தேசியக் கொடியை எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார் பெரியார். 17.7.1955 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு 1955 ஆகஸ்ட் 1ஆம் தேதி கொடி எரிப்புப் போராட்டம் நடத்தும் முடிவை எடுத்தது. இது குறித்து 20.7.1955 அன்று வெளி வந்த ‘விடுதலை’ நாளேட்டில் பெரியார் அறிக்கை வெளியிட்டார். நாடெங்கும் கடும் எதிர்ப்புகள் வந்தன. குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து கடுமையான எதிர்ப்பு வந்தது. அப்போது பெரியார் இவ்வாறு எழுதினார்:

“குமரன் காத்த கொடியை கொளுத்தலாமா என்கிறார்கள் நம் நாட்டு கம்யூனிஸ்டுகள். உலகத்தில் அறிவாளிகள் பிறக்குமிடம் கம்யூனிஸ்ட் கட்சி தான் என்கிறார்கள். நம் நாட்டு கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை அத்தனையும் பொய்யாகிவிட்டது.

குமரன் காத்த கொடி இதுவல்ல; காங்கிரஸ் கட்சி தோன்றிய நாட்களாய் எத்தனை முறை கொடியில் மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது இவர்களைவிட எனக்குத்தான் நன்றாகத் தெரியும். கடைசியாக இருந்த கட்சியின் கொடி அமைப்பில், இராட்டைக்குப் பதில் அசோக சக்கரத்தைப் பதித்து மத்தியில் வைத்து இதுதான் அரசாங்கக் கொடி தேசியக் கொடி என்கிறார்கள். நாம் கொளுத்தப் போவது சர்க்காரின் கொடியைத்தான்” என பெரியார் விளக்கினார்.

போராட்டத்துக்காக 1955ஆம் ஆண்டு ஜூலை 22 முதல் 31 வரை ஊர் ஊராக இரயிலில் பயணம் செய்து தோழர்களை நேரில் சந்தித்து, கொடி கொளுத்தும் போராட்ட வீரர்களின் பட்டியலைப் பெற்றார். பட்டியலை ‘விடுதலை’ நாளேடு வெளியிட்டது. 10,000 பேர் கொடி கொளுத்தப் பெயர் கொடுத்தார்கள்.


நாடெங்கும் பதற்றம் நிலவியது. இந்த நிலையில் 30.7.1955 அன்று முதல்வர் காமராசர் ஒரு அறிக்கை வெளியிட்டார். “அரசுத் தேர்வுகளில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்காது. மத்திய அரசின் சார்பிலும் மாநில அரசின் சார்பிலும் இந்தி எப்போதும் எப்படியும் திணிக்கப்பட மாட்டாது என்று நான் உறுதி கூறுகிறேன். இந்த உறுதிமொழியை நம்பி திராவிடர் கழகத்தினர் தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தைக் கைவிட வேண்டும்; மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன்” என்று அறிக்கை விடுத்தார். இதற்குப் பிறகு தான் தொடர்வண்டி நிலையங்களில் இந்தியில் முதலிடம் பெற்றிருந்த ஊர்ப் பெயர்கள் நீக்கப்பட்டு தமிழில் ஊர்ப் பெயர்கள் பெரிதாக மேலே எழுதப்பட்டன. பெரியார் அறிவித்த தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது.

காமராசர் அறிக்கையைத் தொடர்ந்து பெரியார் ஒரு அறிக்கை விடுத்தார். கொடி கொளுத்தும் போராட்டத்தை தள்ளி வைப்பதாக அறிவித்த பெரியார், “வீண் பொய்க் கவுரவத்தைப் பார்க்காமல் மிகவும் அறிவுடைமையுடன் நடந்து கொண்ட சென்னை அரசாங்கத்தை மனமாரப் பாராட்டு வதுடன், உறுதிமொழிக்கேற்ப நடந்து கொள்ளு மென்றே நம்புகிறேன்” என்று குறிப்பிட்டார்.

கொடி எரிப்புப் போராட்டம் அறிவித்த பிறகு காமராசர் தமிழக அரசு சார்பாக விடுத்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன் தன்னிடம் காட்டி திருத்தங்கள் செய்த பிறகே வெளியிடப் பட்டது என்ற சேதியை பெரியார் ஒரு அறிக்கை வழியாக விளக்கினார்.

3.8.1955இல் ‘விடுதலை’யில் வெளிவந்த அறிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

“இந்தப் பார்ப்பனர்கள்தாம் இப்படிக் காலிகளைக் கிளப்பி விட்டனர் என்றால் மந்திரி கோவிந்த வல்லப பந்த் அவர்கள், கொடி கொளுத்து வது பெரிய இராஜத்துரோகக் குற்றத்திற்குச் சமமான குற்றமாகும் என்று கூறுகிறாராம். அதன் பிறகுதான் கொடிகொளுத்துவோர் பட்டியலில் ஆயிரக்கணக் கில் பெயர் வந்த வண்ணமிருக்கின்றது. அன்றியும் எந்தச் சட்டப்படி, என்ன குற்றம் என்பதே இதுவரை யாருக்கும் புலப்படவில்லை!



**தொடர்வண்டி நிலையங்களில் இந்தியில் முதலிடம் பெற்றிருந்த ஊர்ப் பெயர்கள் நீக்கப்பட்டு தமிழில் ஊர்ப் பெயர்கள் பெரிதாக மேலே எழுதப்பட்டன. பெரியார் அறிவித்த தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி இது.**

வக்கீல்கள் எல்லாம் சட்டப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தும், இப்பேர்ப்பட்ட முக்கிய விசயத்தைப் பற்றிச் சட்டத்தில் ஒன்றுமே தென்படவில்லை. கொடியைக் கொளுத்தினால் என்ன தண்டனை விதிப்பது என்பதைப் பற்றி அரசாங்கமே இன்னமும் சட்டப்பூர்வமாக ஒன்றும் முடிவு செய்யவில்லை.

அப்படி இருக்க, தெருவில் திரியும் ஆண்டி களெல்லாம், கொடியைக் கொளுத்தினால் உயிரைக் கொடுத்துக் காப்பேன் என்று மிரட்டுகின்றனர்.

இவர்கள் மிரட்டலுக்கும், பூச்சாண்டிகளுக்கும் நான் பயந்தவனா? அப்படித்தான் என் உயிர் போனாலும் நஷ்டம் என்ன என்று நினைப்பவன். நானும், இந்நாட்டில் ஒரு மனிதனின் சராசரி வயதைப்போல் மூன்று மடங்கு வயதுடையவன். இதுவரை இருந்தது போதாமல் இன்னமும் உயிருடன் இருக்க ஆசைப்படுபவன் அல்லன், போகிற நேரத்தில் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்துவிட்டுப் போகலாம் என்பதுதான் பெரிய கவலையே தவிர, என் உயிர் போய்விடுமே என்ற கவலை இல்லை.

நானும் இப்போராட்டம் நடந்தே தீரும் - அதன் மூலமாவது பெரிய குற்றமென்று சொல்கிறார்களே அதற்காகவாவது சில வருடங்கள் சிறைவாசம் செய்ய வாய்ப்புக் கிடைக்கும் என்று ஆவலோடு இருந்தேன். என் உடல்நிலையைப் பற்றிக்கூடக் கவனிக்காது **உடல் நிலையில் பலவிதமான குறைகளி லிருந்தும் டாக்டரிடம் சரி செய்து கொள்ளாமல் இருந்து விட்டேன். ஏன்? சொந்தச் செலவில் ஏன் காசை வீணாக்க வேண்டும்; சிறைக்குச் சென்றவுடன் அரசாங்கச் செலவிலாவது பார்த்துக் கொள்ளலாம் என்றெல்லாம் ஆசையுடன் இருந்தேன். ஆனால், தற்சமயம் அவ்வித வாய்ப்புக்கு இடமின்றிப் போய்விட்டது.**

நான் விரும்பியபடியே சர்க்கார் உறுதிமொழி கிட்டியது. என்னுடைய விருப்பப்படி சர்க்கார் எப்படிப்பட்ட வாக்குறுதி கொடுத்தால் போதும் என்றேனோ, அதன்படி வாக்குறுதி தந்துவிட்டது. இந்தி மொழி தமிழ்நாட்டார் மீது கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது என்ற ஒரே உறுதிமொழி கொடுத்தால் போதும் என்றேன்.

இவ்வாக்குறுதியை அடைந்த பிறகு, நான் இக்கிளர்ச்சியை நடத்துவதென்பது சரியல்ல; ஆனால், அரசாங்கமும் இதுவரை அப்படித்தான் கூறி வந்திருக்கிறது. பெரிய தலைவர்களும், மந்திரிகளும்கூட இந்தியை விரும்பாதவர்களிடத்தில் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறி வந்துள்ளார்கள். இன்றைக்கு நடைமுறையில் அப்படிக் காணவில்லை. பிரதமர் நேருவிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார் முதலமைச்சர் காமராசர்.

நேரு அவர்கள் கூட காமராசரிடம் அப்படித் தான் கூறினாராம். நாங்கள் எத்தனையோ முறை இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று கூறியுள்ளோமே என்றாராம். முதலில் காமராசரைக் கண்டவுடனேயே நேரு புன்முறுவல் கொண்டு கிண்டல் செய்தாராம். நாயக்கரும், தாங்களும் கட்டிப் புரளுகிறீர்கள் என்று கூறுகிறார்கள். அவ்விதமிருக்க, உங்கள் ஆட்சியிலேயே நாயக்கர் ஏதேதோ செய்யப் போகிறாராமே? என்று கேட்டாராம். அதற்கு முதன் மந்திரி அவர்கள் எல்லாம் உங்களால் வருவதுதான் என்றாராம். என்ன என்று கேட்டவுடன், இந்தியைக் கட்டாயப்படுத்துவதில்லை என்று பேசிவிட்டு, நடைமுறையில் கட்டாயப்படுத்தப்படுவதைப் பார்த்து ஆத்திரம் பொறுக்காமல் இதுபோன்ற கிளர்ச்சி எல்லாம் செய்கிறார்கள் என்றாராம். பிறகுதான், நம்மிடமா குற்றம் உள்ளது? அப்படி யானால் உடனே சென்று இனி கட்டாயப்படுத்தக் கூடாது என்பதாக அறிக்கை வெளியிடுங்கள் என்றாராம். அதன்படி தான் காமராசர் அவர்களும் அறிக்கை வெளியிடும்படியாகியது.

**அந்த அறிக்கையை வெளியிடுமுன் ஒரு சிலர் என்னிடம் கொண்டு வந்து காட்டி, இப்படி வெளியிட்டால் போதுமா என்று என் சம்மதம் கேட்டனர். நானும் அதைப் பார்த்து, ஒரு சில திருத்தங்களைச் சொல்லி, அதன்படி இருந்தால் போதுமென்றேன். அப்படியே திருத்தங்கள் செய்து அறிக்கையும் வெளியிடப்பட்டது.**

**நானும், வெளியிட்ட எனது அறிக்கையை அவர்களிடம் காட்டவும், அவர்களும் போராட்டத்தை விட்டு விட்டதாகவே வெளியிடச் சொன்னார்கள். ஆனால், நான் அவ்வளவு ஏமாந்தனவனல்லன்! எனவே, நான் தங்கள் அறிக்கையை நடைமுறையில் பார்க்க வேண்டும்; அதுவரை போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை; ஆனால், அதுவரை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளேன் என்பதாகக் கூறி, அதன்படியே போராட்டத்தை ஒத்தி வைத்துள்ளதாக இன்றைய அறிக்கையில் வெளியிட்டுள்ளேன்.**

இவ்வுண்மைகளை நம் நாட்டுப் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்கின்றன. காமராசர் எச்சரிக்கை என்றும், நாயக்கரின் போராட்டம் வாபஸ் என்றும் எழுதுகின்றன. நாட்டின் நலனுக்கென்று உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும் என்ற அறிவாளிகளைக் கொண்ட பத்திரிகைகள் ஒன்றாவது கிடையாது. எல்லாம் பார்ப்பான் நலனுக்கே - பார்ப்பானுடைய ஆதரவிலேயே - பார்ப்பனர்களாலேயே நடத்தப்படுவதால் பித்த லாட்டமும், பொய்யும், புளுகும், லம்பாடித்தன முமாகவே நடந்து கொள்கின்றன.

இதனால் நம் நாட்டின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழியின்றி போய்விடுகின்றது. இப்பத்திரிகைகள் அத்தனையும், நம் நாட்டை வடநாட்டவர்களுக்குக் காட்டிக் கொடுப்பவை களாகத்தாம் உள்ளன”- என்று பெரியார் அறிக்கை விடுத்தார். ‘விடுதலை’ 3.8.1955

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 10.01.2019**

## நெமிலியில் மக்கள் மன்றம் நடத்திய அம்பேத்கர் நினைவு நாள்

மக்கள் மன்றம் சார்பில் காஞ்சி மாவட்டம் நெமிலியில் அம்பேத்கர் நினைவு நாள் கூட்டம் டிசம்பர் 17ஆம் தேதி மக்கள் மன்ற கலை நிகழ்ச்சிகளுடன் நடந்தது.

காவிப் பயங்கரவாதிகளுக்கு எதிராக சமத்துவம்-சகோதரத்துவம் காண உறுதி ஏற்போம் என்கிற முழக்கத்தோடு நிகழ்வு நடைபெற்றது.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அம்பேத்கரின் இந்து எதிர்ப்பு, இராமாயண எதிர்ப்பு பார்ப்பன எதிர்ப்புகளையும் ஜாதி – ஜாதியமைப்பு – ஜாதி ஆணவப் படுகொலை குறித்தும் உரையாற்றினார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் நிறைவுரையாற்றினார்.

மக்கள் மன்றத்தில் பத்தாண்டுகளாக இணைந்துள்ள தோழர் உமாவின் தந்தையார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது அம்பேத்கர் – பெரியார் சிலைகளுக்கு பறை முழக்கத்துடன் மாலைகள் அணிவிக்கப் பட்டன.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘போலி அறிவியல்’ கும்பலுக்கு சில கேள்விகள்

- மகாபாரத காலத்திலேயே சோதனைக் குழாய் குழந்தை பிறப்பு முறை வந்து விட்டது என்றால் பிறகு அது ஏன் நடைமுறையில் இல்லை? வெளி நாட்டுக்காரர்கள் இந்த அறிவியல் முறையை கண்டுபிடிக்கும் வரை, ‘இந்தப் புராண அறிவியல்’ எந்தப் புற்றுக்குள் பதுங்கிக் கிடந்தது?
- சோதனைக் குழாய் குழந்தைகளுக்கு-பெண்-ஆண் விந்துக்களை பரிசோதிக்கும் சோதனைச் சாலைகள் இருந்தனவா?
- ‘ஸ்டெம் செல்’ அறிவியல் புராண காலத்திலேயே இருந்தால் அந்த ‘ஸ்டெம்செல்’ மருத்துவத்துக்குப் பயன்படுத்தப்பட்டதா? அதற்கான மருத்துவர்கள் இருந்தார்களா?
- தசரதன் மனைவிக்கு குழந்தை இல்லாததால் அசுவமேத யாகம் நடத்தி ‘குதிரை’யுடன் தசரதன் மனைவி உறவு கொண்டு இராமன் பிறந்ததாக இராமாயணம் கூறுகிறதே? அப்போது ஏன் ‘சோதனைக் குழாய்’ முறை - இராமன் பிறப்புக்குப் பயன்படுத்தவில்லை?
- அலுமினியம் இரப்பர் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு தான் விமானக் கண்டுபிடிப்பே வந்தது? இராவணன் போர் விமானங்களைப் பயன்படுத்தினான் என்றால் - இரப்பர், அலுமினியம் இல்லாமலே விமானம் வந்து விட்டதா?
- இராம - இராவண யுத்தம் விமானப் போரா? அப்படிப்பட்ட குறிப்பு இராமாயணத்தில் ஏதும் இல்லாமல் போனது ஏன்? இராமாயண யுத்தம், விமானப் படைப் போராக நடந்தது என்றால், ‘இராமன்’ ஏன் அனுமார்களை வைத்து பாலம் கட்ட வேண்டும்? ‘இராமன் பாலம்’ என்று நீங்கள் சாதிப்பது பொய் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?
- எந்த ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பும் - கண்டுபிடிப்புக்குப் பிறகு அடுத்தக்கட்ட வளர்ச்சி நோக்கி விரிவாகுமே தவிர, அது எப்படி முடங்கிப் போய் நிற்கும்?

போலி அறிவியல்வாதிகளே? பதில் உண்டா?

## கழக ஏட்டுக்கு மாதந்தோறும் கழகத் தோழர் ரூ.1000 நன்கொடை



திருச்செங்கோட்டில் தம்பி தேனீர் விடுதி நடத்தும் கழகத் தோழர் சோமசுந்தரம், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1000/- நன்கொடை வழங்குவதாக அறிவித்துள்ளார்.

தோழரின் பங்களிப்பைப் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

– ஆசிரியர்

# கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 68 சதவிகிதம் அதிகரித்தது

மோடி ஆட்சியில் கடந்த நான்காண்டுகளில் இந்தியாவில் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 68 சதவிகிதம் அதிகரித்து இருப்பதாக மத்திய நேரடி வரிவிதிப்பு வாரியம் தெரிவித்துள்ளது.மத்தியில், மோடி தலைமையில் பாஜக அரசு பதவியேற்று நான்கரை ஆண்டுகள் ஆகியிருக்கும் நிலையில்,1 கோடி ரூபாய்க்கும் அதிகமான ஆண்டு வருமானம் ஈட்டுபவர்கள் குறித்த விவரங்களை நேரடி வரிவிதிப்பு வாரியம் வெளியிட்டுள்ளது. அதில்,1 கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஆண்டு வருமானம் இருப்பதாக கூறி வரி செலுத்தியவர்களின் எண்ணிக்கை, கடந்த 4 ஆண்டுகளில் 1 லட்சத்து 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது; கடந்த 2014-15ஆம் நிதியாண்டில் 88 ஆயிரத்து 649 பேர் 1 கோடி ரூபாய்க்கு அதிகமாக வருமானம் ஈட்டுவதாக கணக்கு தாக்கல் செய்திருந்தனர்; ஆனால், அவர்கள் தற்போது 1 லட்சத்து 40 ஆயிரத்து 139 பேர்களாக அதிகரித்துள்ளனர்; இது 68 சதவிகித உயர்வாகும் என்று நேரடி வரி விதிப்பு வாரியத் தலைவர் சுஷில் சந்திரா தெரிவித்துள்ளார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. 9841489896 newsdvk@gmail.com

# காஞ்சி, சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள்

கழகத் தலைவர், பொதுச் செயலாளர், அமைப்புச் செயலாளர், பொருளாளர் மாவட்டம் தோறும் கழகத் தோழர்களை சந்தித்து உரையாடி வருகிறார்கள். சில பகுதிகளில் மாவட்டக் கழக அமைப்புகள் மாற்றியமைக்கப்பட்டன. கழக ஏடுகளுக்கு ‘சந்தா’க்களை தோழர்களிடமிருந்து பெற்று வருகின்றனர். இது குறித்து ஏற்கனவே பல மாவட்ட கலந்துரையாடல் செய்திகள் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டம் டிசம்பர் 20ஆம் தேதி மாலை கூடுவாஞ்சேரி தலைநகர் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. கழகப் பொறுப்பாளர்கள் உரையாற்றியதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

மாவட்டத் தலைவர் செ.கு. தெள்ளமிழ்து; மாவட்ட செயலாளர் மு. தினேசுகுமார்; மாவட்ட அமைப்பாளர் கா. இரவிபாரதி; மாவட்ட துணைத் தலைவர் சி. சிவாஜி; மாவட்ட துணை செயலாளர் சு. செங்குட்டுவன்; மாவட்ட இளைஞரணி தலைவர் மூ. ராஜேஷ்; மாவட்ட இளைஞரணி செயலாளர் ஊமைத்துரை; மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ந. இராமஜெயம்; கூடுவாஞ்சேரி நகர அமைப்பாளர் கோபி, குன்றத்தூர் நகர அமைப்பாளர் கரிகாலன்.

**சென்னை மாவட்டம் :** சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் டிசம்பர் 21ஆம் தேதி காலை 11 மணியளவில் இராயப்பேட்டையிலுள்ள ஆனந்த் அரங்கில் நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள், கழக வளர்ச்சி, கழகச் செயல்பாடுகள் குறித்துப் பேசினர். கீழ்க்கண்ட பொறுப்பாளர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

**எம்.ஜி.ஆர். நகர் பகுதி :** தலைவர் ஜெயசீலன்; செயலர் பெரியார் மணிமொழியன்; பொருளாளர் சு. துரைராசு.

**விருகம்பாக்கம் பகுதி :** தலைவர் க. செல்வம்; செயலாளர் தம்பி தமிழ் சேக்வரா; பொருளாளர் மூவேந்தோர்.

**இராமபுரம் பகுதி :** தலைவர் சுப்பிரமணி; செயலாளர் மணிபாரதி; பொருளாளர் குலசேகரன்.

**கே.கே. நகர் பகுதி :** தலைவர் ஆசிரியர் இளங்கோ, செயலாளர் டெய்லர் கண்ணன்; பொருளாளர் கவிஞர் மன்னார்.

**வடசென்னை பொறுப்பாளர்கள் :** மாவட்டத் தலைவர் முனுசாமி; மாவட்ட செயலாளர் ராஜீ; மாவட்ட அமைப்பாளர் தட்சணாமூர்த்தி.

## ஈரோடு தெற்கு மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம்

ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக கலந்தாய்வுக் கூட்டம் 30.12.18 மாலை 4 மணிக்கு, சென்னிமலை செல்வராசு இல்லத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக, அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் மடத்துக் குளம் மோகன், சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டக் கழகம் சார்பில் ஒன்றிய கிளைக் கழகக் பொறுப்பாளர்கள் நியமனத்தில் மாற்றம் செய்யப்பட்டது. எதிர்வரும் பொங்கல் விழாவை தெற்கு மாவட்டம் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது. கலந்தாய்வில் மாவட்ட, ஒன்றியப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னையில் ‘திராவிடம்’ பயிற்சி வகுப்பு

‘பாப்புலர் பிரன்ட் ஆப் இந்தியா’ அமைப்பு சென்னையில் டிசம்பர் 14,15 தேதிகளில் இரண்டு நாள் பயிற்சி வகுப்பை நடத்தியது. தமிழ்நாடு முழுதுமிருந்தும் 50க்கும் மேற்பட்டோர் பயிற்சியில் பங்கேற்றனர்.

‘சென்னை பிரஸ் கிளப்’ அரங்கில் நடந்த இந்தப் பயிற்சி வகுப்பில் டிசம்பர் 14ஆம் தேதி பகல் 11 மணியிலிருந்து ஒரு மணி வரை ‘திராவிடம்’ என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார்.

திராவிடம் தோன்றிய வரலாறு, அதன் உள்ளடக்கம், வரலாற்றுத் தொடர்ச்சி, திராவிடத்துக்கு எதிராக வைக்கப்படும் வாதங்களில் அடங்கியுள்ள குழப்பங்களை தரவுகளோடு விளக்கினார். உரையைத் தொடர்ந்து பயிற்சி யாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கமளித்தார்



## தமிழர் திருநாள் வாழ்த்து!

**தோழர்களுக்கும், வாசகர்களுக்கும், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தின் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th January 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN